RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 198 | ஜூலை.21 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## மதுரை ஆதீனத்திடம் சைபர் கிரைம் போலீஸார் விசாரணை பாஜக கண்டனம்

மதுரை: ஜூலை.21-

உளுந்தூர்பேட்டை கார் விபத்து விவகாரத்தில் மதுரை ஆதீனத்திடம் சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக சென்னை சைபர் கிரைம் போலீஸார் மதுரையில் விசாரணை நடத்தினர்.

கடந்த 2021ல் மதுரை ஆதீனத்தின் 293வது ஆதீனமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் பொறுப்பேற்று சைவ சமய பணிகளை செய்து வருகிறார். மே 2ம் தேதி சென்னை காட்டாங்கொளத்தூரில் நடந்த சித்தாந்த நிகழ்ச்சியில் பங்கேற்க மதுரை ஆதீனம் காரில் சென்றபோது, உளுந்தூர்பேட்டை பகுதியில் சாலையில் மற்றொரு கார், தனது கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி தன்னை சிலர் கொலை செய்ய முயன்றதாக குற்றச்சாட்டினார். குறிப்பாக 'தொப்பி, தாடி வைத்தவர்கள் ' என, தன் புகாரில் கூறி இருந்தார்.

விபத்து குறித்த சிசிடிவி காட்சியை காவல்துறை தரப்பு வெளியிட்டு தவறான தகவல்களை ஆதீனம் தரப்பினர் வெளியிடுவதாக அறிக்கை வெளியிட்டனர். தவறான தகவல் பரப்பி, மதமோதலை தூண்டும் வகையில் பேசிய ஆதீனத்தின் மீது காவல்துறையினர் வழக்குப்பதிய கோரி சென்னை அயனாவரம் வழக்கறிஞர் ராஜேந்திரன் அளித்த புகாரில் சென்னை கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீஸார், மதுரை ஆதீனம் மீது 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர்.

இவ்வழக்கில் முன்ஜாமின் கோரி மதுரை ஆதீனம், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு செய்தார். "அவருக்கு 60 வயதுக்கு மேல் இருப்பதால் அவர் நேரில் ஆஜராக கட்டாயமில்லை. காவல்துறை நேரில் சென்று விசாரிக்கலாம், விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும்" என்ற நிபந்தனையுடன் முன்ஜாமின் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில் மதுரை ஆதீனத்திடம் விசாரணை நடத்த சென்னை கிழக்கு மண்டல சைபர் கிரைம் காவல்துறையினர் மதுரை மீனாட்சியம்மன் கோவில் அருகே தெற்கு ஆவணி மூல வீதியிலுள்ள ஆதின மடத்திற்கு நேரில் சென்றனர். சைபர் கிரைம் ஆய்வாளர் பத்மகுமாரி தலைமையிலான 3 போலீஸார் அவரிடம் விசாரணை நடத்தினர்.

40க்கும் மேற்பட்ட கேள்விகளை அவரிடம் கேட்டு, அதற்கான பதில்களை பதிவு செய்தனர். அவரது வழக்கறிஞர்களும் பாஜக வழக்கறிஞர்களும் உடனிருடந்தனர். சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விசாரணை நீடித்தது. ஆதின மடத்துக்குள் பெண் காவல் ஆய்வாளர் முதன் முறையாக விசாரணைக்கு வந்ததால் மதுரை விளக்குத்தூண் காவல் உதவி ஆணையர் சூரக்குமார் உள்ளிட்ட போலீஸாரும் மடத்திற்கு வந்தனர்.

மாநகர பாஜக மாவட்ட தலைவர் மாரிசக்கரவர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகளும் அங்கு சென்றிருந்தனர். ஒரு கட்டத்தில் விசாரணைக்கு இடையூறு கருதி யாரையும் காவல்துறையினர் அனுமதிக்கவில்லை. உடல் நிலை பாதிப்பால் எழுந்திருக்க முடியாத சூழலில் வழக்கு ஆவணங்களை எடுத்து கொடுக்க உதவியாளரை உதவிக்கு வைக்கவும் போலீஸார் அனுமதிக்கவில்லை என, ஆதீனம் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைக்கென சில ஆவணங்களை எடுத்துச் சென்றதாகவும் சைபர் கிரைம் போலீஸ் தரப்பில் தெரிவித்தனர்.

இது குறித்து ஆதீனம் வழக்கறிஞரான ராமசாமி மெய்யப்பன் கூறுகையில், 'ஆதீனத்திடம் சைபர் கிரைம் காவல்துறையினர் தனியாக விசாரணை நடத்தினர். வழக்கறிஞர்களை அனுமதிக்கவில்லை. 3 நாட்களுக்கு முன் அவருக்கு அறுவை சிகிச்சை செய்த நிலையில், சைபர் கிரைம் போலீஸார் விசாரித்துள்ளனர். உதவிக்கு ஒருவரை ஏற்க மறுத்தனர். ஆனாலும், அவர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்' என்றார்.

பாஜக தலைவர் அறிக்கை : பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், 'காவல்துறை மதுரை ஆதீனத்திடம் விசாரணை நடத்தியதன் மூலம் மத குருமார்கள், ஆன்மீக பெரியோர்களை சொல்ல முடியாத இன்னலுக்கு உட்படுத்துகிறது திமுக அரசு. தனி மனிதனைப் போல மடாதிபதிகளுக்கும், சமயப் பெரியோர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் உள்ளது. காவல்துறையினர் மூலம் மதுரை ஆதீனத்திற்கு தொந்தவு செய்கின்றனர்' என குற்றம் சாட்டியுள்ளார்.

# ஸ்டாலினின் தோல்வி மாடல் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள்




சென்னை: ஜூலை.21-

மக்கள் விரோத ஸ்டாலினின் தோல்வி மாடல் (Failure Model) ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்" என்கிற உயரிய லட்சியத்துடன், மக்கள் விரோத ஸ்டாலினின் Failure Model ஆட்சியை அகற்ற கோவையில் ஜூலை 7ம் தேதி அன்று துவங்கிய எழுச்சிப் பயணத்திற்கு இமாலய வெற்றியை தொடர்ந்து வழங்கி வரும் தமிழக மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்!

என்னுள் கலந்திருக்கும் எனதருமை தமிழக மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்! ``மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்`` என்கிற எனது முதற்கட்ட புரட்சிப் பயணத்தை, மக்கள் எழுச்சிப் பயணமாக மாற்றி, அதை இமாலய வெற்றிப் பயணமாக்கியதில் முழு பங்கும் தமிழக மக்களாகிய உங்கள் அனைவரையுமே சாரும். உங்கள் அனைவருக்குமே தெரியும், எனது முதற்கட்டமான இந்த எழுச்சிப் பயணத்தை ஜூலை 7ம் தேதி கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் ஆரம்பித்து, நேற்று ஜூலை 19ம் தேதி அன்று திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வரை பிரச்சாரப் பயணத்தை தொடர்ந்து வருகிறேன்.

கோவை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 31 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகரமாக சுமார் 12.5 லட்சம் மக்களை சந்தித்திருக்கிறேன். நான் சென்ற இடங்களில் எல்லாம் என்னை ஆர்வமுடன் சந்தித்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழில் முனைவோர், இளைஞர்கள், வேலையில்லாப் பட்டதாரிகள், குடியிருப்போர் நலச் சங்கத்தினர், வியாபாரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சிறு குறு தொழில் முனைவோர், மருத்துவர்கள், பாட்டாளி வர்க்கத்தினர், மாணவர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் என்று அனைவருமே, 52 மாத கால மக்கள் விரோத ஸ்டாலினின் Failure Model ஆட்சியில், அவர்கள் சந்தித்து வந்த வேதனைகளை எடுத்துரைத்தனர்.

இவர்கள் எல்லோரும், ``நீங்கள் எங்கள் வீட்டுப் பிள்ளை, உங்களைச் சந்தித்ததில் ஆறுதல் அடைகிறோம். எங்கள் வேதனைகளுக்கு எல்லாம் விடிவு காலம் வந்துவிட்டது`` என தங்களின் வலிகளை மறைத்துக்கொண்டு, உளமார வரவேற்று என்னை அன்பில் நெகிழச் செய்தார்கள். மக்களின் ஆற்றல் மிக்க ஆதரவில் மூழ்கிப்போனேன். குறிப்பாக விழுப்புரத்தில் ஒரு தாய் தழுதழுத்த குரலில் ``அண்ணா, நீங்க மீண்டும் எப்ப முதல்வரா வருவீங்க?'' என கூட்டத்தில் இருந்து என்னைப் பார்த்துக் கேட்டபோது, 2026ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டதாகவே உணர்ந்தேன்.

எம்.ஜி.ஆர் தோற்றுவித்த, ஜெயலலிதா வளர்த்த 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்கிற மாபெரும் ஜனநாயக இயக்கம், தமிழக மக்களின் நாடி நரம்புகளில் ரத்தவோட்டமாகக் கலந்திருப்பதை மீண்டும் ஒருமுறை அனுபவப் பூர்வமாகக் கண்டு மகிழ்ந்தேன். ``மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்`` என்கிற இந்த எழுச்சிப் பயணம் எனக்கும், என்னைப் போன்ற கோடிக் கணக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ரத்தத்தின் ரத்தங்களுக்கும் உணர்த்தியது ஒன்றே ஒன்றுதான்.

அது என்னவென்றால் :

› ஆட்சிக்கு வந்த இந்த 52 மாதங்களில் மக்கள் விரோத ஸ்டாலின் Failure Model ஆட்சி, பல பொய்களை மட்டுமே கூறி மக்களை மடைமாற்றம் செய்து, வஞ்சித்துக் கொண்டே இருக்கிறது.

› `உங்களுடன் நான் எங்களுடன் நீங்கள்' என்றெல்லாம் வெற்று விளம்பரங்கள் மட்டுமே செய்து, இந்த மக்கள் விரோத ஸ்டாலின் Failure Model ஆட்சி, தன்னுடைய பித்தலாட்டத்தை தொடர்கிறது.

› தங்களின் சுயநலத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, மக்கள் நலத்தை தள்ளிவைத்துவிட்டு, தமிழ் நாட்டைக் கொள்ளையடிப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறார்கள் பொம்மை முதல்வர் ஸ்டாலினும், அவரது அமைச்சரவை சகாக்களும்.

› நகராட்சி சொத்துக்களை கொள்ளையடிக்கும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் நேரு, நமது எழுச்சிப் பயணத்தை தவறாக சித்தரித்து சம்மந்தியை மீட்போம், சம்பாதித்த பணத்தைக் காப்போம், மக்களை மறப்போம், தமிழ் நாட்டை விற்போம், மகனைக் காப்போம் என என் மீது அவதூறு பரப்பி இருக்கிறார்.

ஆனால், உண்மை என்னவென்றால், 'மந்தி தனது குட்டியை விட்டு ஆழம் பார்க்கும்' என்ற பழமொழிக்கு ஏற்றார்போல், ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் நேருவை விட்டு அறிக்கை என்ற பெயரில் ஆழம் பார்த்திருக்கிறார். அதாவது, நேருவின் ஆழ்மனதில் ஸ்டாலினைப் பற்றி உள்ள 'மருமகனைக் காப்போம் மகனைக் காப்போம், ரியல் எஸ்டேட் மூலமாக தமிழ் நாட்டை கூறுபோட்டு விற்போம், மக்களை மறப்போம், போதைப் பழக்கத்தை பரப்புவோம், இயற்கை வளங்களை சுரண்டுவோம், பல்லாயிரம் கோடிக்கணக்கில் கொள்ளை அடிப்போம், சொத்துக்களை வெளிநாட்டில் முதலீடு செய்து ஊழல் பணத்தை தமிழ் நாட்டிற்கு கொண்டு வருவோம்' என்ற அவர்களின் எண்ணத்தைக் கூறும் விதமாகவே அமைச்சர் நேருவின் பேச்சு உள்ளது.

பொம்மை முதல்வர் ஸ்டாலின் அவர்களே! உங்கள் பொய்யான வாக்குறுதிகளையும், திறனற்ற ஆட்சியையும் கண்டு, உண்மை முகத்தை அறிந்து உங்கள் மக்கள் விரோத ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப தமிழக மக்கள் அனைவரும் உறுதி ஏற்றுவிட்டார்கள். தமிழக மக்களின் உள்ளம் திமுகவை வீட்டுக்கு அனுப்ப ஒன்றுபட்டுவிட்டது. அவர்கள் அடைந்திருக்கும் தாழ்வைப் போக்க சபதமேற்றுவிட்டது.

`மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்`` என்கிற என்னுடைய முதற்கட்ட எழுச்சிப் பயணத்தின் மூலம், நான் உணர்ந்ததை, உங்கள் தோல்வி மாடல் அரசுக்கு ஒரு குறள் மூலம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

இவற்றை எல்லாம் நீங்கள் தமிழகத்துக்குச் செய்யவில்லை என்பதுதான் ஒட்டுமொத்த தமிழர்களின் குற்றச்சாட்டு!

நீங்கள் என்ன மடைமாற்றம் செய்தாலும் சரி, எனது எழுச்சிப் பயணம் தொடரும். மக்கள் ஆதரவு இன்னும் பெருகும். 2026இல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்று, அனைத்து மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் நல் ஆட்சியை வழங்குவோம்.

தவறு செய்த தற்போதைய ஆட்சியாளர்கள் அனைவரும் அதற்கு தக்க பதில் சொல்ல வேண்டிய நிலை வரும். மக்களைக் காப்போம்! தமிழகத்தை மீட்போம்! மக்கள் விரோத ஸ்டாலின் Failure Model ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்!" என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## "ஆட்சியில் பங்கு என்பது காங்கிரசுக்கும் ஆசை உண்டு" கார்த்தி சிதம்பரம் எம்.பி




சிவகங்கை, ஜூலை.21-

ஆட்சியில் பங்கு என்பதில் காங்கிரசுக்கும் ஆசை உண்டு என சிவகங்கை எம்பி கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேர்தலில் வெற்றி பெற்று ஆளும்கட்சியாக அதிமுகவும், எதிர்க்கட்சியாக பாஜகவும் அமரும் என்று கே.டி.ராஜேந்திர பாலாஜி கூறியுள்ளார். அவருக்கு கவலையே வேண்டாம். தமிழகத்தில் பாஜகவுடன் யார் கூட்டணி வைத்தாலும் தோற்றுவிடுவர்.

பாஜகவுடன் கூட்டணி வைத்ததால், அதிமுகவுக்கு கிடைக்கக் கூடிய வாக்குகள் கூட குறைந்துவிடும். திமுக வீடு வீடாகச் சென்று உறுப்பினர்களை சேர்ப்பதை வரவேற்கிறேன். அதை காங்கிரஸூம் பின்பற்ற வேண்டும். 'மிஸ்டு கால்' மூலம் உறுப்பினர்கள் சேர்ப்பதை நான் ஏற்பது இல்லை. தமிழகத்தில் கூட்டணி ஆட்சி வந்ததில்லை. ஆனாலும் ஆட்சியில் பங்கு என்பதில் காங்கிரசுக்கும் ஆசை உண்டு.

பெரும்பான்மை இல்லாமல் ஆட்சியில் பங்கு பெறுவது அல்லது ஆந்திராவைபோல் பெரும்பான்மை கிடைத்தாலும் ஆட்சியில் பங்கு கொடுப்பது என 2 மாடல்கள் உள்ளன. அதை இன்றே பேச வேண்டிய அவசியமில்லை. தேர்தலுக்கு பிறகு பேசிக் கொள்ளலாம்.

காமராஜர் குறித்து திருச்சி சிவா பேசியது தொடர்பாக முதல்வர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இதை பற்றி அண்ணாமலை கவலைப் பட வேண்டாம். அவருக்கு பாஜகவில் எதிர்காலம் இருக்கிறதா? இல்லையா? என்பதைப் பற்றி மட்டும் கவலை படட்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## கட்சி கட்டுப்பாட்டை மீறியதாக பாமக எம்எல்ஏக்கள் மூவர் இடைநீக்கம் : ராமதாஸ் அதிரடி



சென்னை, ஜூலை.21-

கட்சி கட்டுப்பாட்டை மீறி செயல்பட்டதாக பாமக சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர் தற்காலிக இடைநீக்கம் செய்யப்படுவதாக அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாமக தலைமை நிலைய செயலாளர் ம.அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: "பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவர் ராமதாஸ் அனுமதியோ உத்தரவோ இல்லாமல் எந்தவொரு முடிவையும் கட்சி சார்பாக சட்டமன்ற உறுப்பினர்களோ மற்றவர்களோ கட்சியின் விதிகளின் அடிப்படையில் தன்னிச்சையாக எந்த செயலும் செய்வது கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதோடு மட்டுமல்லாமல் ஒழுங்கீன நடவடிக்கை என்று கருதப்படும் என்பது விதி.

சமீபகாலமாக பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களான சிவக்குமார், சதாசிவம், வெங்கடேஸ்வரன் மூவரும் கட்சி கட்டுப்பாட்டை மீறி செய்துவரும் செயல் சட்டமன்றக் கட்சித் தலைவர் ஜி.கே.மணி அவர்களால் கட்சியின் தலைமைக்கு கொண்டுவரப்பட்டு கட்சியின் தலைமை நிர்வாக்குழு அதனை ஒழுங்கு நடவடிக்கை குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியதில், அந்த குழு அந்த மூன்று சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வழக்கறிஞர் கே.பாலு ஆகியோரின் செயல்பாடுகள் மற்றும் தமிழக சட்டப்பேரவை சபாநாயகரை சந்தித்து சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள் அவர்களை பொய்யாக கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கி விட்டதாக சொன்ன செயல் ஆகியவை ஒழுங்கீனமான செயல் என்பது முதற்கட்ட விசாரனையில் தெரியப்படுத்தியதால் அவர்கள் மீது விரிவாக விசாரனை நடத்த வேண்டியிருப்பதால் நால்வரும் கட்சியின் உறுப்பினர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள்.

ஒழுங்கு நடவடிக்கைக் குழு முன் அவர்கள் நால்வரும் விசாரனைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டியிருப்பதால் அதுவரை கட்சித் தொண்டர்களும் மற்ற தலைவர்களும் அவர்களிடம் கட்சி சம்மந்தமாக எந்த தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். விசாரனைக் குழு அவர்கள் நால்வரையும் விசாரனைக்கு அழைத்து விளக்கம் கேட்பதற்கு முழு அதிகாரமும் நிறுவனர் மற்றும் தலைவர் கொடுத்துள்ளார் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.







# சிவகங்கை மாவட்டம் கல்லலில் வளமான சூழல் நல்வாழ்வு தலைப்பில் ஓவியப் போட்டி

கல்லல், ஜூலை.21-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் முருகப்பா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. ராம்ராக் நினைவு பாசறை நிறுவனர் சந்திரமோகன் தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டப் பொருளாளர் பிரபு வரவேற்புரையாற்றினார். ஓவியப் போட்டியில் நடுவர்களாக பழனிக்குமார் வள்ளியப்பன் சிறப்பாக பணியாற்றினார்கள். அரசு உயர்நிலைப்பள்ளி கல்லல் கோவிலூர் பாகனேரி அரசு மேல்நிலைப்பள்ளி செம்பனூர் பாகனேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சிறூர் குருந்தம்பட்டு செவரக்கோட்டை தே பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி தேவக்கோட்டை முருகப்பா மேல்நிலைப்பள்ளி



சாந்திராணி பதின்ம மேல்நிலைப்பள்ளி பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி கல்லல் சேது ஐராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கண்டரமாணிக்கம் கல்யாணி கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தேவப்பட்டு ஆகிய பள்ளிகளின் 107 மாணவ மாணவிகள் போட்டிகளில் பங்கேற்றனர். தேவகோட்டை தே பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி மாணவர் ஜோஸ் பிலாசியூஸ் முதலிடத்தையும் கல்லல் பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி மாணவர் ரதீஸ்வரன் திவேஸ்பவின் இரண்டாம் மூன்றாம் இடத்தையும் தே பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி தேவகோட்டை மாணவர் விஷால் கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி மாணவர் சிவசங்கர் ஆகியோர் சிறப்பு பரிசுகளையும் பெற்றனர்.

ஆசிரியர்கள் நாச்சம்மை ராஜலட்சுமி சித்திரைச்செல்வி சுதா ஆகியோர் அறைக் கண்காணிப்பாளர்களாக சிறப்பாக பணியாற்றினர். ஓவிய ஆசிரியர் மாரிமுத்து முத்து சுப்பிரமணியன் அதிகரம் செல்வகுமார் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க கல்லல் கிளைத்தலைவர் தனுஷ் ஸ்டாலின் நன்றி கூறினார்.






# இலஞ்சி பிஎட் கல்லூரி சிறப்பான கல்லூரியாக செயல்பட்டு வருகிறது பல்கலை துணை வேந்தர் பாராட்டு

தென்காசி, ஜூலை.21-

தென்காசி அருகே உள்ள இலஞ்சி பிஎட் கல்லூரி தென்காசி மாவட்டத்தில் சிறந்த கல்லூரியாக செயல்பட்டு வருவதாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பாராட்டு தெரிவித்தார்.

தென்காசி அருகே உள்ள இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா கல்லூரியின் சேர்மன் நெல்லை பேராயர் ஏஆர்ஜிஎஸ்டி பர்னபாஸ் தலைமையில் நடந்தது.

தாளாளர் ராஜகுமார், ஆலோசகர் முனைவர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார் முதல்வர் முனைவர் கலா வின்சிலா வரவேற்றார் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் சந்திரசேகர் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பட்டம் பெற்ற மாணவ ஆசிரியர்களுக்கு பட்டங்கள் வழங்கி பேசியதாவது.

சமுதாயத்தின் வளர்ச்சியிலும், நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வதிலும் கல்வி முக்கிய பங்கினை வகிக்கிறது அந்த கல்வியை புகட்டுவதிற்கு ஆசிரியர்கள் பணி இன்றியமையாதது. அதற்கான ஆசிரியர்களை உருவாக்குவதில் தென் மாவட்ட அளவில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் இலஞ்சி டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரி சிறந்து விளங்கி வருவது பாராட்டுக்குரியது. ஆசிரியர்கள் டாக்டர் ராதாகிருஷ்ணன், அப்துல் கலாம் போன்று சிறந்த ஆசிரியர்களாக உருவாகி வருங்கால சந்ததியை சிறந்த சந்ததியார் உருவாக்க வேண்டும் என பேசினார் விழாவிற்கு ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள் அருள்திரு ஸ்டேன்லி இம்மானுவேல், அந்தோணி, ராஜேந்திரன், உதவி பேராசிரியர்கள் ஷீலா நவரோசி, ஜெனிபர், லீதியாள் சொர்ண ஜெயா, ஜரீன், நூலகர் முனைவர் ஏஞ்சலின், உடற்கல்வி இயக்குனர் ஐசக், அனிதா, அலுவலக பணியாளர்கள் ப்ரெட்ரிக், ஷேரன், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்






தூத்துக்குடி சிவன் கோவிலில் 20.2.2013. அன்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஏழை பக்தர்களுக்கு தினமும் 100 சாப்பாடு வழங்கிட துவக்கி வைத்த திட்டத்தில்

# தினமும் 20 சாப்பாடு எங்களுக்கு தர வேண்டும் என்று வாய்மொழி உத்தரவு போட்ட இந்து அறநிலைத்துறை ஊழியர்கள் என்று கூறப்படுவதை கண்டுகொள்ளாத சிவன் கோவில்நிர்வாக அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத்- நடவடிக்கை எடுக்க பக்தர்கள் கோரிக்கை

தூத்துக்குடி, ஜூலை.21-

தூத்துக்குடி மாவட்டம் தமிழக முழுவதும் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் மதியம் சாப்பிட வேண்டும் என்ற சீரிய எண்ணத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக முழுவதும் உள்ள இந்து கோவில்களில் மதியம் அன்னதானம் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார், அதன்படி தூத்துக்குடி சிவன் கோவிலில் 20.2.20213. அன்று அன்னதானம் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது இதை பராமரிக்கும் முழு பொறுப்பு கோவில் நிர்வாக அதிகாரியாக இருக்கும் தமிழ்ச்செல்வி என்பவருக்கு உன்டு இந்த நிலையில் தங்களுக்கு தமிழக அரசு மூலம் சாப்பிட தினமும் வழங்கக்கூடிய 100 சாப்பாட்டில் தினமும் 20 சாப்பாட்டை பல லட்சம் சம்பளம் வாங்கக்கூடிய அரசு ஊழியர்களான இந்து சமய அறநிலையத்துறை ஊழியர்களுக்கு ஒதுக்கி கொடுப்பதாக பக்தர்கள் தரப்பில் தற்போது பெரும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது இது குறித்து பல்வேறு முறை புகார் கூறியும் கோவில் நிர்வாக அதிகாரி தமிழ்ச்செல்வி,நடவடிக்கை எடுக்கவில்லை என்று




கூறப்படுகிறது மேலும் இக்கோவிலில் அன்னதானம் சாப்பிடும் பக்தர்களுக்கு முறையாக கை கழுவ வாஷ்பேஷன் எதுவும் அமைக்கப்படாததால் சுகாதாரமற்ற முறையில் உள்ள இடத்தில் வரும் பைபிள் குனிந்து கை கழுவும் அவல நிலை ஏற்பட்டுள்ளது இது போன்ற குறைகளை மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்று சிவன் கோவில் பக்தர்கள் தறப்பில் எதிர்பார்க்கப்படுகிறது,

மேலும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் கோவிலுக்கு வரும் ஏழை பக்தர்களுக்காக வழங்கக்கூடிய மதியஅன்னதான திட்டத்தில்

பல லட்சம் சம்பளம் வாங்கக்கூடிய இந்துசமய அறநிலையத்துறை ஊழியர்களான எங்களுக்கும் தினமும் 20 சாப்பாடு தர வேண்டும் என்று வாங்கிச் செல்வதாகவும் கூறப்படுகிறது

மேலும் அன்னதானம் சாப்பிடும் பக்தர்கள் கை கழுவ முறையாக வாஸ் பேஷன் இல்லை என்றும் பக்தர்கள் தரப்பில் கூறப்படும் பெரும் குற்றச்சாட்டை நிவர்த்தி செய்ய தூத்துக்குடி சிவன் கோவிலில் நடைபெறும் அன்னதானத்தை மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் உடனேஅதிரடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்று சிவன் கோவில்பக்தர்கள் சார்பில் கோரிக்கை விடுத்து வருகின்றனர்..



# சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சிவ பிரசாத் பொறுப்பேற்றுக் கொண்டார்

சிவகங்கை, ஜூலை.21-

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சிவ பிரசாத் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் கர்நாடக மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்தவர், 2016 ஆம் ஆண்டில் ஐபிஎஸ் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவர் முதலில் விருதுநகரில் உதவி எஸ்.பி.யாகப் பணியாற்றினார், பின்னர் மதுரை மாநகர துணை ஆணையராக பதவி உயர்வு பெற்றார், பின்னர் மதுரை தேனி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றினார் சிவகங்கை மாவட்டத்தின் புதிய எஸ்.பி.யாக நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார் .




சிவகங்கை மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்திற்கு,

# உறுப்பினர் சேர்க்கைக்கான உரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, வருகின்ற 23.07.2025 ஆம் தேதிக்குள் சமர்ப்பித்திடல் வேண்டும்

சிவகங்கை, ஜூலை.21-

சிவகங்கை மாவட்டத்தில், 2025-2026 ஆம் ஆண்டில் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் 2 துவங்குவதற்கு அரசாணை எண்:32, நாள்:30.5.2025 வரப்பெற்றுள்ளது. அதில், மாவட்ட ஆட்சித்தலைவரை பதவி வழி தலைவராகவும், மகளிர் திட்டம் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திட்ட அலுவலரை பதவி வழி உபதலைவராகவும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலரை பதவி வழி பொருளாளராகவும் மற்றும் அந்த மதத்தினை சேர்ந்தவர்களை கௌரவ செயலாளர் 1,2 உறுப்பினராகவும் கொண்டு சங்கத்தினை பதிவு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்ட "முஸ்லீம் மகளிரின் நலனைக் கருத்திற்கொண்டு, சிவகங்கை மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்2 புதிதாக துவங்குவதுடன், இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக ரூ.1 இலட்சமும் வழங்கப்படவுள்ளது". எனவே, அச்சங்கத்திற்க்கு முஸ்லீம் மதத்தினை சார்ந்த புதிய உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

மேலும், உறுப்பினர் சேர்க்கைக்கான உரிய விண்ணப்பத்தை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் நேரில் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வருகின்ற 23.07.2025 ஆம் தேதிக்குள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்திடல் வேண்டும்.

டுதல் விபரங்களுக்கு, மாவட்ட ஆட்சியர் வளாகம் கீழ் தளத்தில் இயங்கி வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை நேரிலோ அல்லது 04575245008 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில்

# துப்புரவு தொழிலாளர்களுக்கு ஷத்திரிய பாசறை மற்றும் காமராஜர் நேதாஜி சமூக அறக்கட்டளையின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது

தாம்பரம், ஜூலை.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பெருந்தலைவர் காமராஜரின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் துப்புரவு தொழிலாளர்களுக்கு ஷத்திரிய பாசறை மற்றும் காமராஜர் நேதாஜி சமூக அறக்கட்ட ளையின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சிக்கான ஷத்திரிய பாசறை மற்றும் காமராஜர் நேதாஜி சமூக நல அறக்கட்டளை நிறுவன தலைவர் ஆதித்யா சம்பத்குமார் தலைமை வகித்தார் பொருளாளர் பாண்டியராஜ் முன்னிலை வைத்தார்

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாராக தாம்பரம் மாநகர காவல் உதவி ஆணையாளர் நெல்சன் கலந்து கொண்டு தொழிலாளர்களுக்கு மதிய உணவு வழங்கினார்

இதில் குரோம்பேட்டை காவல் சட்ட ஒழுங்கு ஆய்வாளர் தயாளன், தாம்பரம் காச நோய்மருத்துவ மனை துப்புரவு தொழிலாளர்களின் மேற்பார்வையாளர் அருள்ராஜ் உட்பட மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்





அதனை தொடர்ந்து தாம்பரம் மாநகர மணிமங்கலம் காவல் நிலையத்தில் காவலர்களுக்கு உதவி ஆய்வாளர்கள் தலைமை காவலர்கள் காவலர்கள் முதல் நிலை காவலர்கள் ஆகியோருக்கு பெருந்தலைவர் காமராஜரின் 123வது பிறந்த நாளை விழாவை ஒட்டி நினைவு பரிசு தாம்பரம் மாநகர ஆயுதப்படை ஆய்வாளரும் காமராஜர் நேதாஜி சமூக நல அறக்கட்டளையின் கௌரவ ஆலோசருமான மணிமாறன் வழங்கினார் இதில் மணிமங்கலம் காவல் நிலைய தலைமை காவலரும் காமராஜர் நேதாஜி சமூக நல அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகருமான சங்கீதா உட்பட பலர் உடன் இருந்தனர்

தெருநாய்கள் மட்டுமின்றி வீட்டில் உள்ள நாய், பூனை போன்ற விலங்குகள் கடித்தாலோ, கீறல்கள் ஏற்படுத்தினாலோ

# ரேபிஸ் தடுப்பூசியினை, அட்டவணையின்படி முறையாக செலுத்தி, ரேபிஸ் நோயிலிருந்து பாதுகாத்து கொள்ளுதல் வேண்டும்

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.21-

ரேபிஸ் என்பது பாதிக்கப்பட்ட விலங்குகளின் உமிழ் நீரில் இருந்து மனிதர்களுக்கு விலங்குகள் கடிப்பதன் மூலமாகவும், கீறல்கள் மூலமாகவும் பரவும் ஒரு கொடிய வைரஸ் நோயாகும்.

தெருநாய்கள் மட்டுமின்றி வீட்டில் உள்ள நாய், பூனை போன்ற விலங்குகள் கடித்தாலோ, கீறல்கள் ஏற்படுத்தினாலோ காயத்தை சோப்பு போட்டு குழாய் தண்ணீரில் நன்கு கழுவ வேண்டும். மேலும், அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளை அணுகி ரேபிஸ் தடுப்பூசி (RAY) மற்றும் ரேபிஸ் இம்யுனோகுளோபுலின் (RIG) (காயத்தின் தீவிர தன்மையை பொறுத்து) உடனடியாக போட்டுக் கொள்ள வேண்டும். ரேபிஸ் தடுப்பூ சியானது அட்டவணைப்படி 0,3,7,28 ஆகிய நாட்களில் போடவேண்டும். இல்லையெனில், முழுமையான பலன் கிடைக்காது. நான்கு தவணை போட்டு முடிக்காதவர்களுக்கும் கூட ரேபிஸ் நோய் தாக்கம் ஏற்படும். எனவே, தடுப்பூசியினை அட்டவணைப்படி முழுமையாக செலுத்திக் கொள்ளவேண்டும்.

நாய்க்கடித்தவர்களுக்கு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்து வக்கல்லூரி மருத்துவமனையில் தினந்தோறும் ரேபிஸ் தடுப்பூசி போடப்படும்.

மேலும், நாய் கடித்தவர்கள் உடனடியாக காயத்தை கழுவுதல், உடனடியாக மருத்துவ கவனம் பெறுதல், அட்டவணைப்படி தடுப்பூசி செலுத்தி முடித்தல் ஆகிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, ரேபிஸ் நோயிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ளுதல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.




# எஸ்.ஜே.சூர்யாவின் 'கில்லர்' ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு

எஸ்.ஜே.சூர்யா நாயகனாக நடித்து இயக்கி வரும் 'கில்லர்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்டுள்ளது படக்குழு.

10 ஆண்டுகளுக்குப் பிறகு 'கில்லர்' படத்தின் இயக்குநராக திரும்பியிருக்கிறார் எஸ்.ஜே.சூர்யா. இதன் படப்பிடிப்பு சென்னையில் பூஜையுடன் தொடங்கப்பட்டது. இப்படத்தினை கோகுலம் மூவிஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இன்று எஸ்.ஜே. சூர்யாவின் பிறந்த நாளை முன்னிட்டு 'கில்லர்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை வெளி யிட்டுள்ளார்கள். இதற்கு திரையுலகினர் பலரும் எஸ்.ஜே.சூர்யாவுக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி என அனைத்து மொழிகளிலும் இப்படம் வெளியாகவுள்ளது. இதில் நாயகியாக ப்ரீத்தி அஸ்ரானி நடித்து வருகிறார். இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மான் பணிபுரிந்து வருகிறார். இதில் எஸ்.ஜே.சூர்யாவுடன் நடிக்கவிருக்கும் இதர நடிகர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது.

காதல் கலந்த ஆக்ஷன் படமாக பெரும் பொருட்செலவில் இப்படம் உருவாக இருக்கிறது. இதற்காகவே பிரம்மாண்ட ஸ்போட்ஸ் கார் ஒன்றை வாங்கியுள்ளார் எஸ்.ஜே.சூர்யா.



# 15 வருடங்களுக்கு பிறகு கவுதமன் இயக்கத்தில் படையாண்ட மாவீரா

'மகிழ்ச்சி' படத்திற்கு பிறகு கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் கழித்து வி.கவுதமன் இயக்கி, ஹீரோவாக நடித்துள்ள படம் 'படையாண்ட மாவீரா'. பூஜிதா பொன்னடா ஹீரோயினாக நடித்துள்ளார். தமிழ் கவுதமன் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் சரண்யா பொன்வண்ணன், சமுத்திரக்கனி, ஆடுகளம் நரேன், கிங்ஸ்லி, மன்சூர் அலிகான், இளவரசு, நிழல்கள் ரவி, தலைவாசல் விஜய், தீனா உள்ளிட்ட ஒரு நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர். வில்லன்களாக 'பாகுபலி' புகழ் பிரபாகர், மதுசூதன ராவ், கபீர் துஹான் சிங் ஆகியோர் நடித்துள்ளனர். வைரமுத்து வரிகளில் ஜி.வி.பிரகாஷ் குமார் பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். சாம்.சி.எஸ் பின்னணி இசை அமைத்துள்ளார். ஸ்டண்ட் சில்வா இயக்கத்தில் 5 சண்டை காட்சிகள் இப்படத்தில் இடம்பெற்றுள்ளது.

இப்படம் பற்றி கவுதமன் பேசும்போது, ''இப்படம் வெளியானப் பிறகு தமிழகத்தில் மிகப்பெரிய அதிர்வலைகளை உண்டாக்கும். சாதி, மதம், இனம் போன்ற தீய எண்ணங்கள் இருக்கும் மனிதர்கள் இப்படத்தை பார்த்தால் அவர்களின் மனதை சுத்தப்படுத்தும். தமிழ்க்குடி ஆண்டாண்டு காலமாக சண்டையிட்டு தன்னைத்தானே மாய்து கொண்ட கூட்டம், மீண்டும் அதுபோல் இல்லாமல் இந்த மண்ணையும், மக்களையும் காக்க வேண்டும் என்பதை சொல்லும் இப்படத்திற்கு 'படையாண்ட மாவீரா' என பெயர் வைத்தேன்'' என்றார். இப்படம் வரும் ஆகஸ்ட் மாதம் திரைக்கு வருகிறது.


# கார் டிரைவர் பணியாளருக்கு தலா ரூ.50 லட்சம்: அலியா பட்டுக்கு குவியும் பாராட்டு



பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் அலியா பட். இவர் நடிகர் ரன்பீர் கபூரை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு மகள் உள்ளார். இவர்கள் மும்பையில் ரூ. 250 கோடி செலவில் புதிய வீடு ஒன்றை கட்டியுள்ளனர். விரைவில் அதில் குடியேறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரையுலகில் உள்ள நட்சத்திரங்கள் தங்களது பணியாளர்களுக்கு இடம் வாங்கி வீடு கட்டி கொடுப்பது, கார் வாங்கி தருவது. அவர்களின் பிள்ளைகளின் படிப்பு செலவை பார்த்து கொள்வது என பல உதவிகளை செய்வார்கள். இந்த நிலையில், அலியா பட் தனது வீட்டு பணியாளர் மற்றும் கார் டிரைவர் என இருவருக்கும் செய்திருக்கும் மிகப்பெரிய உதவி பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. வீட்டின் பணியாளர் மற்றும் கார் டிரைவர் இருவருக்கும் தலா ரூ. 50 லட்சம் கொடுத்து வீடு வாங்கி கொள்ள கூறியுள்ளார் அலியா பட்.

அவர்களும் மும்பையில் உள்ள முக்கிய இடத்தில் தற்போது வீடு வாங்க இருக்கிறார்கள். இந்த தகவல் வெளியாகி வைரலாக, பலரும் அலியா பட்டை பாராட்டி வருகிறார்கள்.




# ஆக்கிரமிப்பு

## சினிமா விமர்சனம்:

நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில், உப்பள தொழிலாளிகளிடம் இருந்து அடாவடியாக உப்பு கடத்தும் ரவுடி வான்யா, தன்னை எதிர்ப்பவர்களை கொல்கிறார். இதை எதிர்க்கும் அழகு பிரகாஷின் தாய்மாமா நிர்மல், வான்யாவுக்கு உப்பு தராமல், அங்குள்ள வேறொருவருக்கு விற்க முடிவு செய்கிறார். இதையறிந்த வான்யா, உடனே நிர்மல் மனைவியை கொல்கிறார். இதை கண்டு கொதிக்கும் அழகு பிரகாஷ், வான்யாவை என்ன செய்தார் என்பது மீதி கதை.


ஆக்ரோஷமாக நடித்துள்ள அழகு பிரகாஷ், காதலி சுகன்யாவை விட்டு விலகியே இருக்கிறார். கிராமத்து அழகு பெண்ணாக சுகன்யா மனதை கவர்கிறார். இயக்குனர் வான்யா அட்டகாசமாக நடித்துள்ளார். தீபா சங்கர், பலே. 'என் ராசாவின் மனசிலே' நிர்மல், ரஞ்சன், 'விக்ரம் வேதா' விஜய் சத்யா, சுமதி, குபேரர், வதிலை வசந்தா, முத்துச்சிப்பி உள்பட அனைவரும் நன்கு நடித்துள்ளனர். ஒளிப்பதிவாளர் சாய் நந்தாவின் கேமராவுக்கு அப்ளாஸ் தரலாம். பாடல்களிலும், பின்னணி இசையிலும் ஜான் பீட்டர் கடுமையாக உழைத்துள்ளார். வினைக்கு எதிர்வினை உண்டு என்று எழுதி இயக்கியுள்ள வான்யா, பிரமாண்ட பட்ஜெட் இல்லாமல் திணறியிருக்கிறார் என்றாலும், பழிவாங்கும் யுக்தியை வேறொரு கோணத்தில் வழங்கியுள்ளார்.



# போட்டோஷூட்டுக்காக சங்கமித்த இந்திய கிரிக்கெட் அணி, மான்செஸ்டர் யுனைடெட்

தனியார் நிறுவன போட்டோஷூட்டுக்காக இந்திய கிரிக்கெட் அணியும், மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து கிளப் அணியும் மான்செஸ்டரில் சந்தித்தன. இரு அணிகளின் வீரர்களும் சங்கமித்த இந்த போட்டோஷூட் தருணம் சமூக வலைதளத்தில் கவனம் பெற்றுள்ளது. ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஆண்டர்சன் சச்சின் டிராபி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடரில் மூன்று போட்டிகள் நிறைவடைந்துள்ளன. தொடரில் 12 என இந்தியா பின்தங்கி உள்ளது. இந்த தொடரின் நான்காவது போட்டி மான்செஸ்டரில் வரும் புதன்கிழமை தொடங்க உள்ளது. இதற்காக மான்செஸ்டரில் இந்திய கிரிக்கெட் அணி தற்போது பயிற்சி மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில்தான், ப்ரீமியர் லீக் கால்பந்து தொடரில் விளையாடி வரும் மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து கிளப் அணியை இந்திய அணி போட்டோஷூட்டுக்காக சந்தித்தது. இதில் இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில், மான்செஸ்டர் யுனைடெட் அணியின் கேப்டன் புருனோ பெர்னாண்டஸ், இரு அணிகளின் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என அனைவரும் சந்தித்தனர். அப்போது இரு அணி வீரர்களும் தங்களது ஜெர்ஸியை மாற்றிக் கொண்டனர். இந்த சந்திப்பின் போது இரு அணி வீரர்களும் கிரிக்கெட் மற்றும் கால்பந்து விளையாடி மகிழ்ந்தனர். இது ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்களை மகிழ செய்துள்ளது.

# அரை இறுதியில் அர்ஜுன் எரிகைசி தோல்வி



ஃப்ரீஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் டூர் செஸ் தொடரின் 4வது கட்ட போட்டி அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதி சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான அர்ஜுன் எரிகைசி, அமெரிக்காவின் லெவன் அரோனியனுடன் மோதினார். இதில் அர்ஜுன் எரிகைசி 02 என்ற கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். முதல் ஆட்டத்தில் வெள்ளை காய்களுடன் அர்ஜுன் எரிகைசி விளையாடினார்.


கருப்பு காய்களுடன் விளையாடிய லெவன் அரோனியன் கடினமான சூழ்நிலையில் இருந்த போதிலும் உறுதியாக இருந்தார். அதேவேளையில் அர்ஜுன் எரிகைசி சிறந்த நிலையில் இருந்த போதிலும் அதை பயன்படுத்திக் கொள்ளத் தவறினார். இதை தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்ட லெவன் அரோனியன் அபாரமாக செயல்பட்டு 39வது நகர்த்தலில் வெற்றி கண்டார்.

2வது ஆட்டத்தில் அர்ஜுன் எரிகைசி கருப்பு காய்களுடன் விளையாடினார். இந்த ஆட்டத்தை லெவன் அரோனியன் டிரா செய்தாலே இறுதிப் போட்டியில் நுழைந்து விடலாம் என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால் அர்ஜுன் எரிகைசி வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் இருந்தார். ஒரு கட்டத்தில் இருவரும் சமநிலையில் இருந்ததால் ஆட்டம் டிராவை நோக்கி செல்லும் நிலை இருந்தது.

அந்த சூழ்நிலையில் அர்ஜுன் எரிகைசி ரிஸ்க் எடுத்தார். இதனால் 50வது நகர்த்தலின் போது அவர், தோல்வியை சந்தித்தார். முடிவில் அர்ஜுன் எரிகைசி 02 என்ற கணக்கில் தோல்வி அடைந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தார். மற்றொரு அரை இறுதியில் அமெரிக்காவின் ஹான்ஸ் மோக் நீமன் 1.5 2.5 என்ற கணக்கில் சக நாட்டைச் சேர்ந்த ஹிகாரு நகமுராவை வீழ்த்தி இறுதிப் போட்டியில் கால்பதித்தார்.

# மான்செஸ்டர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியே ஷுப்மன் கில்லின் பாதையை வரையறுக்கும்: சொல்கிறார் கிரேக் சேப்பல்





ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 12 என பின்தங்கி உள்ளது. லீட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து பர்மிங்ஹாமில் நடைபெற்ற 2வது டெஸ்டில் இந்திய அணி 336 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

இதன் பின்னர் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 3வது டெஸ்டில் இங்கிலாந்து அணி 22 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தியது. இதன் மூலம் தொடரில் இங்கிலாந்து அணி 21 என முன்னிலை வகிக்கும் நிலையில் 4வது டெஸ்ட் போட்டி வரும் 23ம் தேதி மான்செஸ்டர் நகரில் தொடங்க உள்ளது. இந்நிலையில், ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் கிரேக் சேப்பல் கூறியதாவது:

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் கடைசி இரு ஆட்டங்களுக்காக இந்திய அணி தயாராகி வருகிறது. தற்போது அனைவரது கவனமும் 25 வயதான கேப்டன் ஷுப்மன் கில் மீது திரும்பியுள்ளது. பிரகாசமான இளம் திறமைசாலியான அவர், பேட்டிங்கிலும், தலைமைத்துவத் திறனிலும் சிறந்து விளங்கியுள்ளார். ஆனால் மான்செஸ்டர் டெஸ்ட் போட்டியே ஒரு டெஸ்ட் கேப்டனாக அவரது பாதையை வரையறுக்கும். கேப்டனாக வளர்வதற்கு இது எளிதான சூழல் அல்ல. இதைவிட அதிகமான ஆபத்து இருக்க முடியாது.

இந்தியா எந்த மாதிரியான அணியாக இருக்க வேண்டும் என்று கில் வரையறுக்க வேண்டும். கேப்டன் தனது வார்த்தைகளால் மட்டுமல்ல, செயல்களாலும், நோக்கத்தின் தெளிவாலும், தரநிலைகளாலும் ஒரு குறிப்பிட்ட பாணியை அமைக்க வேண்டும். அதாவது இது களத்தில் நேர்த்தியாக செயல்படுவதை பற்றியதாகும். பீல்டிங்கில் மீண்டும் மோசமாக செயல்படும் அணியாக இந்தியா இருக்கக் கூடாது. சிறந்த அணிகள் எப்போதும் களத்தில் சிறப்பாகவே செயல்படும். அவர்கள் எளிதாக ரன்களைக் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். வாய்ப்புகளை தவறவிடவும் மாட்டார்கள். தேர்வுக்குழுவினரும், ஷுப்மன் கில்லும் போட்டியை வெல்லக்கூடிய அணியைத் தேர்ந்தெடுப்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

ஷுப்மன் கில், தான் நம்பும் முக்கிய வீரர்களை அடையாளம் கண்டு, தெளிவான விளையாட்டுத் திட்டத்தை வகுக்க வேண்டும். மேலும், அதில் ஒவ்வொரு வீரர்களுக்குமான பணியை தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு வீரரிடம் இருந்தும் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அந்த வீரர்களும் அறிந்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் எந்த இடத்துக்கு பொருந்துகிறார்கள் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும்.

பெரும்பாலும், போராடும் அணிகளில், வீரர்கள் தாங்களாகவே இவற்றை சரிசெய்ய வேண்டியது இருக்கும். சிறந்த கேப்டன்கள் தகவல்களை பறிமாறிக் கொள்வதில் சிறந்தவர்களாக இருப்பார்கள். ஷுப்மன் கில், அதில் ஒருவராக மாற வேண்டும். விரைவாகவும், பயிற்சியின் போதும், களத்திலும் அல்லது இடைவேளையின் போதும் ஓய்வு அறையிலும் தெளிவான, அமைதியான தகவல் தொடர்பு அவசியம். ஷுப்மன் கில் எப்போதும் அவரது மட்டையால் பேச முடியாது. அணியை சீரமைக்கும் நம்பிக்கையை ஊக்குவிக்கும் மற்றும் நம்பிக்கையை உருவாக்கும் வகையில் அவர் பேச கற்றுக்கொள்ள வேண்டும்.

சரியான அணுகுமுறையை வீரர்களிடம் விளக்க வேண்டும். பேட்ஸ்மேன்களை நேர்மறையாக விளையாடவும், பார்ட்னர்ஷிப்களில் கவனம் செலுத்தவும் கூறவேண்டும். பேட்ஸ்மேன் சிறந்த தொடக்கத்தை பெற்றால், பெரிய ஸ்கோரைப் பெறுவது முக்கியம். பந்துவீச்சை பொறுத்தவரையில், விக்கெட்டுகள் எடுப்பது மட்டுமல்ல, அழுத்தத்தை உருவாக்குவதும் முக்கியம் என்பதை பந்து வீச்சாளர்கள் அறிந்திருக்க வேண்டும். நல்ல பந்துகளை வீசுதல், நல்ல ஓவர்களை வீசுதல் மற்றும் நல்ல ஸ்பெல்களை வீசுதல் என செயல்பட்டு அழுத்தத்தை உருவாக்க வேண்டும். அழுத்தம் தவறுகளை உருவாக்குகிறது. இது மந்திரம் அல்ல, அது ஒரு செயல்முறை.

ஷுப்மன் கில் ஒரு சிறந்த டெஸ்ட் கேப்டனாக விரும்பினால். இதுதான் அவரது அதிகாரத்தை முத்திரை குத்துவதற்கான தருணம். பேட்டிங் மூலம் மட்டுமல்ல, அவரது கேப்டன்ஷிப் மூலமும் காட்ட வேண்டும். இதற்காக அவர், தரத்தை நிர்ணயிக்க வேண்டும். இதை மற்ற வீரர்களிடமிருந்தும் பெற வேண்டும். தனக்கான அணியை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். அப்போது ஒவ்வொரு வீரரும் தன்னிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறிந்து செயல்படுவார்கள்.

ஏனென்றால், கிரிக்கெட் என்பது ஹீரோக்களைப் பற்றியது அல்ல. அது பார்ட்னர்ஷிப் ஆட்டத்தை பற்றியது. அது அணி களைப் பற்றியது. மேலும் அது தங்களைச் சுற்றியுள்ளவர்களிடமிருந்து சிறந்த திறனை வெளிக்கொண்டு வரும் கேப்டன்களைப் பற்றியது. கில் சிந்தனையுடனும் தெளிவுடனும் நோக்கத்தின் வலிமையுடனும் அணியை வழி நடத்தினால் அவர் இந்தத் தொடரை மட்டும் வடிவமைக்க மாட்டார். இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலத்தையும் வடிவமைப்பார். இவ்வாறு கிரேக் சேப்பல் கூறியுள்ளார்.



■ மதுரை அழகர்கோயில் சாலையில் உள்ள மதுரை காமராசர் பல்கலைகழக கல்லூரியில் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகள் தேர்வு நடைபெற்றதை மாவட்ட ஆட்சித் தலைவர்.கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

## அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களுக்கு பதிலாக, மறுசுழற்சி செய்யக்கூடிய மக்கும் பொருட்களை பயன்படுத்தி வரும் உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளுக்கு, தமிழக அரசின் சார்பில் பரிசு தொகை மற்றும் கேடயம் வழங்கப்படவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.21-

அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களுக்கு பதிலாக, மறுசுழற்சி செய்யக்கூடிய மக்கும் பொருட்களை பயன்படுத்தும் உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளை ஊக்குவிக்கின்ற வகையில், தமிழக அரசின் சார்பில் பரிசுத்தொகை மற்றும் கேடயம் வழங்கப்படவுள்ளது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களின் சட்டப் பேரவை அறிவிப்பு எண். 77/202526ன்படி, உணவு வணிகம் செய்பவர்கள் தடை செய்யப்பட்ட நெகிழி பைகளை பயன்படுத்தாமல் மாற்று வழிகளை மேற்கொள்வதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மீண்டும் மஞ்சள்பை 2021 அறிவிப்பை பலப்படுத்தும் வகையிலும், தடை செய்யப்பட்ட நெகிழி பயன்படுத்தாமல் மாற்று வழிகளை பயன்படுத்தி வரும் உணவு வணிகர்களுக்கு தமிழக அரசின் சார்பில் பரிசு தொகை மற்றும் கேடயம் வழங்கும் அறிவிப்பானது வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, சிறப்பாக செயல்படும் உரிமம் பெற்ற உணவு வணிகருக்கு ரூ. 1,00,000/மும், பதிவு சான்றிதழ் பெற்ற உணவு வணிகருக்கு ரூ.50,000/மும் பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இதற்கென சிறப்பு குழு அமைத்து உணவு வணிகர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.2

மேலும், உணவு வணிகர்கள் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் பரிசு தொகை மற்றும் கேடயம் பெறுவதற்கான விண்ணப்பத்தை வட்டார / நகர் உணவு பாதுகாப்பு அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். உணவு வணிகர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தளம், அறை எண். 239ல் செயல்பட்டு வரும் உணவு பாதுகாப்புத்துறையின் மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் வருகின்ற 31.08.2025 ஆம் தேதிக்குள் சமர்ப்பித்திடல் வேண்டும்.

கூடுதல் விபரங்களுக்கு 04575243725 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது dofssasvg@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு முழுக்க நியாய விலைக் கடைகளுக்கு.. பறக்க போகும் ஆர்டர்.. ரேஷன் கடைகளில் நடக்கும் மாற்றம்

சென்னை, ஜூலை.21-

கூட்டுறவுத் துறையின் கீழ் நியாய விலைக் கடைகளில் உள்ள 3,353 காலியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு கூட்டுறவு துறையின் கீழ் மேற்கொண்டுள்ள முக்கிய சாதனைகளை அரசு அதிகாரப்பூர்வ அறிக்கையாக வெளியிட்டுள்ளது 2021 முதல், 66.24 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.53,340 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 11.70 லட்சம் பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.4,904 கோடி மதிப்பிலான தங்க நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1.01 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2,118 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்சவரம்பு ரூ.20 லட்சத்திலிருந்து ரூ.30 லட்சமாக உயர்த்தப்பட்டது. விவசாயம் சார்ந்த நடவடிக் கைகளை ஆதரிக்கும் வகையில் 11.88 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.6,372 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது. 47,221 மாற்றுத் திறனாளிகள், 16,578 பணிபுரியும் பெண்கள், 49,000 பெண் தொழில் முனைவோர் மற்றும் 4,494 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் 86 துப்புரவுப் பணியாளர்கள் இயந்திரமயமாக்கப்பட்ட கழிவுநீர் வாகனங்களைப் பெற்று தொழில் முனைவோர்களாக மாறியுள்ளனர். கூடுதலாக, மாநிலம் முழுவதும் மலிவு விலையில் மருந்துகளை வழங்குவதற்காக 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் 1,000 முதலமைச்சரின் மருத்துவக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், இந்த மைல் கற்கள் திராவிட மாடலின் உள்ளடக்கிய ஆட்சியை பிரதிபலிக்கின்றன. என்று கூறப்பட்டுள்ளது.

சேமிப்புக் கிடங்கு மேலாண்மை மற்றும் கூட்டுறவு வங்கிச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கியதற்காக மத்திய அரசிடம் இருந்து தமிழ்நாடு அரசு பல விருதுகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் கூட்டுறவுத் துறையின் கீழ் நியாய விலைக் கடைகளில் உள்ள 3,353 காலியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. தமிழக அரசு ஊழியர்களுக்கான அறிவிப்பு தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களுக்கு என்று கடந்த 30 நாட்களில் மட்டும் ஏகப்பட்ட முக்கியமான அசத்தலான அறிவிப்புகளை தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டு உள்ளார். அரசு ஊழியர்களை கவரும் விதமாக.. அவர்ளின் பல நாள் கோரிக்கைகளை ஏற்று பல முக்கியமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன. இந்த அறிவிப்புகள் என்னனென்ன என்று இங்கே பார்க்கலாம்.

தமிழக அரசு போக்குவரத்து கழக 6% ஊதிய உயர்வு வழங்கப்படும் என முடிவெடுக்கப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்து கழகங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடைசியாக 14வது ஊதிய ஒப்பந்தம் கடந்த 2023ம் ஆண்டு முடிவடைந்தது. அரசு ஊழியர்களுக்கு கட்டணமின்றி ஆயுள் காப்பீடு, விபத்து காப்பீடு குறித்து முதல்வர் ஸ்டாலின் சமீபத்தில் அறிவிப்பு வெளியிட்டார். ஆயுள் காப்பீடு மற்றும் விபத்துக் காப்பீட்டை கட்டணமின்றி வழங்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக, அரசு ஊழியர்களுக்குஇலவசமாக இந்த திட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 2% உயர்த்தப்பட்டது. இந்த முறை அரசு சார்பாக 2% உயர்வு செய்யப்பட்டதால் நிலை 1 அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் ரூ. 360 ஆக இருக்கும். அதாவது ரூ.360 சம்பளத்தில் உயரும் என்று அறிவிக்கப்பட்டது. 7வது ஊதியக் குழுவின் கீழ், அரசு ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் (நிலை 1) ரூ.18,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இவர்களுக்கு 360 ரூபாய் அகவிலைப்படி உயர்வு இருக்கும் அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக் கால முன்பணம் ரூ.10,000ல் இருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் கல்வி முன்பணம் தொழிற்கல்விக்கு ரூ.1 லட்சம், கலை, அறிவியல், மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளுக்கு ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

## தமிழ்நாடு முதலமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட 6 வாகனங்களை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்

சிவகங்கை, ஜூலை.21-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு வழங்க ப்பட்ட வாகனங்களை, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். மாங்குடி அவர்கள் முன்னிலையில் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசில் அனைத்து துறைகளும் சிறந்து விளங்கி வருகிறது. அத்துறைகளில், ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாக கொண்டு, தமிழகம் முழுவதும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஊரக வளர்ச்சி மக்றும் ஊராட்சித் துறையினால் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும், உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும், கள ஆய்வு மேற்கொள்ளவும், பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாகவும், துறை அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் 202526ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டது.

அவ்வறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 11.7.2025 அன்று தலைமை செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையை சார்ந்த அலுவலர்களின் பயன்பாட்டிற்கென தமிழகம் முழுவதும் ரூ.17.65 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 198 வாகனங்கள் வழங்கப்பட்டது. அதில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சித்துறையின் பல்வேறு நிலைகளைச் சார்ந்த அலுவலர்களின் பயன்பாட்டிற்கு 6 வாகனங்கள் மொத்தம் ரூ.52,94,816/ மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாகனங்களை இன்றையதினம் (19.7.2025) பயன்பாட்டிற்கென தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற கடந்த மே 2021 முதல் தற்சமயம் வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக இதுபோன்று, மொத்தம் ரூ.109.91 கோடி மதிப்பீட்டில் 1,018 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடதக்கதாகும்.

அதில், சிவகங்கை மாவட்டத்திற்கு மட்டும், இன்றையதினம் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ள 6 வாகனங்கள் உட்பட மொத்தம் 44 வாகனங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையை சார்ந்த அலுவலர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.ஜி.ரமேஷ், உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.கே.ரவி, உதவி திட்ட அலுவலர் திரு.ஆர். பாலசந்தர், உதவி செயற் பொறியாளர் ஜி.ஜெயராஜ், கல்லல் மற்றும் தேவகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், வாகன ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

## வருகின்ற 18.07.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டமானது, நிர்வாக காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டு வருகின்ற 25.07.2025 அன்று நடைபெறவுள்ளது

சிவகங்கை, ஜூலை.21-

வருகின்ற 18.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறவிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டமானது, நிர்வாக காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டு, வருகின்ற 25.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. மேலும், சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 25.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## நாளை முதல் 31ம் தேதி வரை பள்ளி அளவிலான போட்டிகள்: பள்ளி கல்வித்துறை உத்தரவு

**சென்னை, ஜூலை.21–**

பள்ளிக் கல்வி இயக்குநர் கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை: அரசுப் பள்ளிகளில் 6 9ம் வகுப்பு வரை பயிலும் மன்ற செயல்பாடுகளை மகிழ் முற்றம் மாணவர் குழுக்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் நடைமுறைப்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி நடப்பு கல்வியாண்டுக்கான இலக்கிய மன்றம், வினாடிவினா போட்டிகளை பள்ளி அளவில் நாளை (ஜூலை 21) முதல் ஜூலை 31ம் தேதி வரை திட்டமிட்டு நடத்த வேண்டும். இந்த போட்டிக்கான தலைப்புகள், மதிப்பீடு விவரங்கள் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. போட்டிகளின் முடிவுகள் அன்றைய தினமே அறிவிப்பதுடன் வெற்றியாளர்களின் விவரங்களை ஜூலை 31ம் தேதிக்குள் எமிஸ் தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்த, சமண மற்றும் சீக்கிய மதத்தினர் புனித பயணம் மேற்கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், பயன்பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.21-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 50 புத்த மதத்தினர், 50 சமண மதத்தினர் மற்றும் 20 சீக்கிய மதத்தினர், இந்தியாவில் உள்ள அவரவர் மதங்களுக்கான புனித தலங்களுக்கு புனித பயணம் மேற்கொள்ள தமிழக அரசால் ஆண்டுதோறும் நபர் ஒருவருக்கு ரூ.10,000/ வீதம் 120 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சம் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொண்டு, பயன்பெற விரும்பும் புத்த, சமண மற்றும் சீக்கியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இப்புனித பயணமானது புத்த மத தொடர்புடைய 1. பீகாரில் உள்ள புத்த கயா, 2. உத்திரப்பிரதேசத்தில் உள்ள குசிநகர், 3. வாரணாசியில் உள்ள சாரநாத் கோவில், 4. பீகாரில் உள்ள ராஜ்கிர், வைஷாலி, 5. நேபாளத்தில் உள்ள லும்பினி போன்ற புனித தலங்களையும், சமண மத தொடர்புடைய 1.இராஜஸ்தானில் உள்ள தில்வாரா கோவில், ரணக்பூர் சமண கோவில், ஜெய்சால்மர் சமண கோவில், 2. ஜார்கண்டில் உள்ள சிக்கர்ஜி, 3. குஜராத்தில் உள்ள பாலிடனா, 4. பீகாரில் உள்ள பவபுரி சமண கோவில் போன்ற இடங்கள், 5. கர்நாடகாவில் சரவணபெலகோலா போன்ற புனித தலங்களையும் மற்றும் சீக்கிய மத தொடர்புடைய 1. பஞ்சாப்பில் உள்ள அமிர்தரசஸ், தக்ட் ஸ்ரீகேசகர் சாகிப், தக்ட் ஸ்ரீடாம்டமா சாகிப், 2. பீகாரில் உள்ள தக்ட் ஸ்ரீ ஹர்மந்திர் சாகிப் (குரு கோவிந்த் சிங்), தக்ட் ஸ்ரீ ஹசூர் சாகிப், (மஹாராஷ்டிரா) போன்ற இடங்கள், 3. பாகிஸ்தானிலுள்ள குருத்வாரா ஸ்ரீ நான்காணா சாகிப், குருத்வாரா ஸ்ரீ தெஹ்ரா சாகிப் போன்ற புனித தலங்களையும் உள்ளடக்கியதாகும். மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் கடந்த 01.07.2025 ஆம் தேதிக்கு பிறகு புனித பயணம் மேற்கொள்பவர்களுக்கு ணிசிஷி முறையில் நேரடியாக மானியம் வழங்கப்படவுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்/ சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். அதுமட்டுமன்றி, www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். எனவே, விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை வருகின்ற 30.11.2025ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வைத்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## தட்டி தூக்கும் தவெக.. முதல்வர் வேட்பாளர் விஜய்! எக்ஸ் தளத்தை தெறிக்கவிடும் நண்பா, நண்பிஸ்

சென்னை, ஜூலை.21-

தமிழகத்தில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நெருங்க இருக்கிறது. இந்நிலையில் அரசியல் கட்சிகள் தங்களது பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியிருக்கின்றன. இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ‘முதல்வர் வேட்பாளர் உங்கள் விஜய்’ என்கிற பெயரில் பிரசாரம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இதற்காக சோஷியல் மீடியாக்களில் ‘#முதல்வர்வேட்பாளர்_விஜய்’ எனும் ஹேஷ்டேக் தற்போது டிரண்ட் செய்யப்பட்டு வருகிறது.

குறிப்பாக ஜ் தளத்தில், இந்த ஹேஷ்டேக் தேசிய அளவில் ட்ரெண்டிங்கில் இருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற தேர்தலுக்கும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் குறிப்பிட்ட வாசகத்தை ‘தீம்‘ ஆக வைத்து தங்களை மக்கள் மத்தியில் பிரபலமாக்கிக்கொள்ளும்.

சொன்ன ரஜினியின் அண்ணன்” உதாரணமாக ‘ஸ்டாலின்தான் வராரு விடியல் தர போறாரு’, ‘மாற்றம் முன்னேற்றம் அன்புமணி’, ‘வெற்றி நடைபோடும் தமிழகம்‘, ‘தமிழர் உரிமை மீட்போம்; தமிழகம் காப்போம்‘ போன்ற முழக்கங்களை முன்வைத்திருந்தது. அந்த வகையில் தவெகவும் தங்களுக்கு என ஒரு முழக்கத்தை முன்வைத்திருக்கிறது. ‘முதல்வர் வேட்பாளர் உங்கள் விஜய்’ என்பதுதான் அந்த முழக்கம். நேற்று ஆதவ் அர்ஜுனா தலைமையில் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில், இந்த முழக்கம் முன்வைக்கப் பட்டிருக்கிறது. இதனை




அனைத்து மாவட்ட செயலாளர்களும் தாங்கள் அடிக்கும் போஸ்டர்கள், பேனர்கள், நோட்டீஸ்கள் உள்ளிட்டவற்றில் இந்த வாக்கியம் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மக்கள் மத்தியில் விஜய்யை முதல்வர் வேட்பாளராக கொண்டு சேர்க்க முடியும் என்று கட்சி நம்பியிருக்கிறது. மட்டுமல்லாது இந்த உத்தரவு முக்கிய மெசேஜை பாஜக, அதிமுகவுக்கு கொடுத்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதாவது விஜய்யை இழுக்க அதிமுக மற்றும் பாஜக உள்ளிட்ட கட்சிகள் முயன்று வருவதாகவும், அவர்களுக்கு நோ சொல்ல, பாஜகவுடனும், அதனுடன் கூட்டணி வைத்திருக்கும் கட்சியுடனும் கூட்டணி கிடையாது என்பதை சொல்வதற்காகவும் இந்த மெசேஜ் என்று சொல்லப்படுகிறது.

விஜய் கட்சியை தொடங்கும்போது பாஜகவை கொள்கை எதிரி என்று குறிப்பிட்டாரே தவிர, பாஜகவுக்கு எதிராக பெரிய அளவில் பேசவில்லை. தவெக தமிழக அரசுக்கு எதிராக தீவிரமாக பணியாற்றும் என்பது அப்போதே தெரிய வந்ததாக பலரும் கூறியிருந்தனர். அதேபோல தவெக ஒன்றும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு சிறப்பான செயல் திட்டங்களையோ, கொள்கைகளையோ கொண்டிருக்கவில்லை என்றும் விமர்சனங்கள் எழுந்திருந்தன. இருப்பினும் தவெக சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு குவியும் ஆட்களை பார்த்தால், ஆளும் கட்சிக்கு கடுமையான சவாலை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது. இப்படி இருக்கையில்தான் தவெக தேர்தல் முழக்கத்தை முன்னெடுத்து சென்றிருக்கிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161